உ

திருவள்ளுவர்.

மாதந்தோறும் வெளிவரும்,

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி க] நள-ஆு புரட்டாசி-மீ [பகுதி ரு

உள்ளுறை. பக்கம்.

சரித்திரப்பயன்	65
சவுக்கு மரம்	67
போர்க் கருவிகள்	69
ஜெர்மன் தேசத்திய திக்கற்ற குழந்தைகள்	72
தாதாபாய் நௌரோஜி	73
வர்த்தமானக் குறிப்புகள்	78
கல்வியறிவில்லாத ஸ்திரீயின் செய்கை	80

பத்திராதிபர்:—கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை
கோயமுத்தூர்.

வருஷசந்தா ரூ. 1 } { வெளிநாட்டுக்கு ரூ. 2
தபாற்கூலி அணா 2 } { தனி சஞ்சிகை அ. 2

Printed by Gnabaranam Chettiyar at the Emmanuel Press,
Published by K. S. Subramaniya Pillay.

நமது பத்திரிகையின் போஷகர்கள்.

ஸ்ரீமான் கோப்பண்ண மன்றாடியாரவர்கள்,
ஜெமீன்தாரர்,
புறவிபாளையம்.

ஸ்ரீமான். என். ஆர். மலையாண்டி செட்டியாரவர்கள்,
ஜில்லாபோர்டு மெம்பரும், மிராசுதாரரும்,
உடுமலைப்பேட்டை:

ஸ்ரீமான். எஸ். ஏ. கந்தசாமிபிள்ளையவர்கள்,
பிரபல கண்டிராக்டர்,
மேட்டுப்பாளையம்.

ஸ்ரீமான். பி. ஆர். ராமசாமி கவுண்டரவர்கள்,
மிராசுதார், பொன்னுண்டம்பாளையம.
சோமனூர் போஸ்டு.

திருவள்ளுவர்.

ஒரு மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

“திருவள்ளுவர்” என்ற நாமம் பூண்ட இத்தமிழ்ப்பத்திரிகை சென்ற ஏப்ரல்-மீ முதற்கொண்டு பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இது நமது தமிழ்ப் பாஷை விர்த்தியடையவேண்டும் என்னும் நோக்கத்தோடும், நம்மவர்கள் இலௌகிக ஆன்மார்த்த ஞானங்களை எளிதில் பெறவேண்டுமென்கிற கருத்தோடும் பிரசுரிக்கப்பபடுகிறது. காகிதம் முதலிய யாவும் விலையேறியிருக்கும் இக்காலத்தில் இதற்கு வைக்கப்பட்டிருக்கும் மிக்க சொல்பமான சந்தாவே அவ்வுண்மையை வெளிப்படுத்தப்படும்.

இப்பத்திரிகைக்கு 50 ரூபாய் கொடுப்பவர்கள் நிரந்தர போஷகரும் 3 ரூபாய் கொடுப்பவர்கள் கௌரவ அபிமானிகளுமாவார்கள் வருஷ சந்தா ரூபாய் 1—0—0.

மானேஜர்

திருவள்ளுவர் ஆபீஸ்,
கோயமுத்தூர்.

உ

கடவுள் துணை.

திருவள்ளுவர்.

தொகுதி ௧.] நள-௵ புரட்டாசி-௴ [பகுதி ௫.

சரித்திரப்பயன்

ஒத்ததறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்.

இக்காலத்தில் நமது தேசமாகிய இப்பரதகண்டம் க்ஷீண தசையடைந்திருக்கிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். இக் கஷ்டதசையிலிருந்து சீக்கிரம் விமோசனம் வேண்டுமென்பது ஒவ்வொரு இந்தியவாசியின் விருப்பமென்பதற்கு சந்தேகமில்லை. இத்துன்ப நிவர்த்தியடையும் மார்க்கமேதென்று ஆராய்வது நமது கடமை, அவ்வாறு ஆராய்ந்து தெளிவதென்ன வெனில் இப்பொழுது மிக தசையடைந்து உலகமெங்கும் வியாபிக்கும் ஐரோப்பிய கண்டத்தாரும், மிக்க செல்வம் நிறைந்த அமெரிக்கா கண்டத்து ஐக்கிய மாகாணத்தாரும், பராக்கிரமசாலிகளான ஜப்பானியரும், வெகுவாய்ப்பயின்று விசேஷத்தேர்ச்சிபெற்று, அதிகமாய்க்கொண்டாடிவரும் தங்கள் தங்கள் சுவதேச ராஜாங்க சரித்திரங்களை, நாம் படிக்காததனால் உண்டாகும் சிரத்தைக்குறைவேயாகும் அஃதெங்ஙனமெனின், சுதேச சரித்திர ஞானமில்லாததினால் நமது ஹிருதயங்களில் தேசபக்தி விளைவதில்லையென்றும், நாம் வாழும் இப்பூர்வீக நாட்டை ரட்சிப்பதில் ஊக்கமற்றவர்களாகிறோமென்றும் அதனால் விளையும் துன்பங்கள் எண்ணிறந்தவை யென்பதும் இக்காலத்திய நம்மிந்திய தேசபக்த சிரேஷ்டர்களின் அபிப்பிராயம்.

199042

சரித்திர மென்பதற்குப்பொருள் நல்லபெயர் என்று ஒருவாறு கொள்ளலாம். எப்படி ஒரு புருஷனுச்கு நன்னடக்கையால் நல்ல பெயருண்டாகிறதோ, அப்படி ஒவ்வொரு ஜாதியார், நாட்டார்களின் நடக்கை அவரவர்களின் குணவிசேஷங்களாறியப்படும். இவ்வறிவால் உண்டாகும் நன்மைகள் பல தம் முன்னோர்களின் சரித்திரப்பெருமையே தாம் பெருமையடைவதற்குத் தூண்டுகோல். அவரது மகிமையான குணங்களின் சிந்தனையே ஊக்கத்துக்குக்காரணம் ஊக்கத்தாலுண்டாகும் முயற்சியே போனபாக்கியங்களை அழைப்பிக்கும் ஓர் மந்திரக்கோலாம். இதையுத்தேசித்துத்தான் இந்திய சரித்திரத்தில் வல்லோராகிய ஸ்ரீமான் ஹண்டர் என்பவர் ', எந்த ஜாதியாருக்கு பூர்விக மகிமையில்லையோ, அவர்களுக்கு வருங்காலத்திலும் பெருமையில்லை என்கிறார்.

பூர்வராஜ்ய விஷயத்தைப்பற்றி உண்மையாயும் பூரணமாயும் அறிவதற் குபயோகமான கதைத்தொடர்ச்சியே சரித்திர சாஸ்திரீய நிபுணர்களால் சரித்திரமென்று வழங்கிவருகிறது. அப்பேர்ப்பட்ட சரித்திரங்கள், எல்லாக்கலைகளிலும் வல்ல நமது முன்னோர்களுக்குள் ஏது காரணத்தாலோ பிரபலிக்கவில்லை, அது நமது துர்ப்பாக்கியமே! நாம் பிள்ளைகளுக்குப் போதிக்குமவைகளில், விக்கிரமார்க்கன், போஜராஜன் இவர்போன்றவர்களின் கதைகளும் ராயர் அப்பாஜி வேடிக்கைக்கதைகளுமே சரித்திர சம்மந்தப்பட்டுள்ள காலில்லாக்கதைகளாம். இதிகாச புராணங்களில் சொல்லப்பட்டவைகளோவெனில், பரமார்த்தீக. தெய்வ, வைதீக சரித்திர விஷயங்களுக்கமையுமே யல்லாது, லௌகீக வியாவகாரிக்சப் பிரமாணங்களுக்கொப்பாது. அவை தரும, கரும, நீதி, பக்தி, வைராக்கிய,. யோக, ஞான, வேதாந்த விஷயங்களை வெகுவாய் விஸ்தரிக்கின்றன. அவை ராஜாங்க உற்பத்திக் கிரம நாசங்களையும், பிரஜா க்ஷேமதுக்கங்களையும், சில ரகசியார்த்தமான நீதிக்கதைகளாலும், சுருக்கமான நியாயங்களாலும், சுட்டிக் காட்டினவேயொழிய விஸ்தாரமான உதாரணங்களால் தெரிவிக்கவில்லை. இதிகாச புராண முனிகளுக்குப் பின்னிட்ட மகாபுருஷர்கள், எவ்வாறு மற்ற கலைகளில் வேறு விஸ்தாரமான சுத்த கிரந்தங்கள் செய்தனரோ அப்படியே நாமும் நம்மாலியன்றமட்டும் சுத்தசரித்திர கிரந்தங்களை காலதேசவர்த்தமான நடவடிக்கைகளை யனுசரித்துச் சிறுகச் சிறுகச் செய்யத்தொடங்கவேண்டுவது நமது கடமையென்பது திண்ணம். சுத்த சரித்திர கிரந்தப்பயிற்சி

லாமல் ராஜரீக முறைகளைத்தீர அறிவது முடியாது. ராஜரீகமுறைகளின் அறிவினுல் தான் சில தற்கால தோஷ பரிஹாரங்கள் சாத்தியமாகும்.

தவிர, காலக்கிரமத்தில் நமது தேசத்தாரும்' மற்ற செல்வத்துடன் வாழும் மேனுட்டார்களின் பரிகாசத்துக் கிடமான முக்கிய குறை நீங்கி அவர்களுக்குச் சமதையாவோம். அன்றேல், தற்கால உலக நிலைமையையும், இக்காலத்துப் பிரபலமாயுள்ள நாட்டாரின் சரித்திர நடவடிக்கைகளையும், ஆலோசிக்குமிடத்து இந்தியர்களாகிய நாம் வெகு நாள் வாழ்வதே அரிதாகுமென்பது சரித்திர சாஸ்திரீயப் பிரமாணக்கொள்கை. அவ்வாறே ஸ்ரீ கிருஷ்ணபகவானும் கீதையில் சொல்லுகிறுர் "மனிதன் தான் பெருமையடைவதற்கும் தானே காரணமாகிறுன். தனக்கு நெருங்கிப் பந்துவும் தானே, நீங்கா வைரியுந்தானே" இதின் கருத்னத நம்மில் விவேகிகளெல்லோரும் செம்மையாய் மனனஞ் செய்து தமது க்ஷேமத்தையும் தேசக்ஷேமத்தையும் அதிகரிக்க முயல்வாராக.

சவுக்குமரம்.

சவுக்குமரம், ஜலமகப்படக்கூடிய மணற்பாங்கான விடங்களில் விசேஷமாய்ப்பயிரிடக்கூடியது இப்பயிர்செய்வோர்; இச்சவுக்குப்பயிர் செய்வதற்கு முன்னுல், பணத்தைச் செலவழித்துச் சிலவருஷங்கள் கழிந்தபின்னர் அதனுல் உண்டாகும் பெரும்பலனை எதிர் பார்க்கவேண்டும். இச்சவுக்கு நாற்று நட்ட கொஞ்சகாலம் வரையில், சவுக்குப்பயிருடன் எளிதில் சொற்பகாலத்தில் பயிரிடக்கூடிய ஆமணக்குப்பயிர் முதலியவற்றைப் பயிர்செய்து சொற்ப லாபம் பெறலாம். இப்பயிர் தலையெடுத்து ஓங்கி வளர்கிற வரையில் வாரத்தில் இரண்டு முறை தண்ணீர் பாய்ச்சவேண்டும். சவுக்கு நாற்று நட்டபின் தக்க போஷிப்பும், பாதுகாப்பும் காலந்தவருப் பருவமழைகளும் சரிவரப்பெய்தால் ஐந்துவருடங்களில் அச்சவுக்கு மரங்கள் ஆளாகி வெட்டி உபயோகப்படுத்த யோக்கியமுள்ளனவாகின்றன இக்கட்டைகள் கரும்பாலை, பஞ்சாலை முதலியவற்றிற்கு மிகுதியும் உபயோகப்படுகின்றன. பூவரசு, வேல், ஆல், முந்திரி முதலிய மரங்களின் விறகுகளைக்காட்டிலும்

சவுக்கு விறகு அதியுஷ்ணமானதேயாம். மற்ற விறகுகளை அடுப்
பிலிட்டு சமையல் செய்வதைக்காட்டிலும், சவுக்கு விறகை அடுப்
பிலிட்டுச் சமைப்பதனால் சாப்பாடு வெகு சீக்கிரத்தில் சித்தமா
கின்றது. ஆனால் அவ்விறகினால் சமைக்கப்பட்ட சாப்பாடு அதி
யுஷ்ணமானதென்று பலபிரபல வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்
ளப்பட்டிருக்கின்றது மொத்தத்தில் சவுக்கின் அடிமுதல் நுனி
வரையிலுள்ள ஒவ்வோரங்கமும் உபயோகப்படுத்தக்கூடியது.
சவுக்குச் செத்தையையும் ஏழை ஜனங்கள் அடுப்பெரிக்க உபயோ
கப்படுத்துகிறார்கள். சிறு சுள்ளிகள் கற்றை கற்றையாகக்கட்
டப்பட்டு கற்றை இரண்டு தம்பிடி வீதம் விற்கப்படுவதானால்,
நெற்றி வேர்வை நிலத்தில் வடியக்காலை முதல் மாலை வரையில்
பாடுபட்டு இரண்டரையணா சம்பாதிக்கும் ஏழை ஜனங்கள் சுகம
டைவாராயினர். கட்டைகள் துண்டு துண்டாக நறுக்கப்பட்டு,
கிராக்கிக்குத்தக்கவாறு விற்கப்படுகிறது. மிக்க ஒழுங்காகவும்
யாதொரு கோணல் முதலியன வின்றியும், இச்சவுக்கு சுமார் 60
அடி உயரமும் தவறினால் சுமார் 70 அடி உயரமும் வளர்வதனால்
பெருங்கட்டிட வேலைகளுக்கு உபயோகமாகின்றது இம்மரங்களை
அநேகமாய் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வெட்டத்துவக்கு
கின்றார்கள். அவ்வாறு மழைகாலங்களில் வெட்டுவதனால் பின்
னிட்டு உளுத்துப்போகாதிருக்குமென்று கருதப்படுகிறது. கீல் மி
குதியும்பூசி இம்மரங்களினுதவிகொண்டு நிருமிக்கப்பட்ட வீடுகள்
பலவருடங்கள் வரையிலும் நல்ல நிலைமையிலிருந்து வருவதை
நாம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம் இவ்வாறு இச்சவுக்கினால்
இக்காலத்திலடையும் நன்மை அநேமாயிருக்கின்றன இம்மரப்ப
ட்டையும் ஒருவகைச்சாயம் எடுக்க உபயோகப்படுகின்றன. நம்
நாட்டின் சில பாகங்களிலிருந்து அப்பட்டைகள் ஐரோப்பியதே
சங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. அத்தேசத்தினர் இப்பட்டை
களிலிருந்து ஓர் விதசாயமெடுத்து அதற்குத்தக்க மாற்றுகள்
சேர்த்து காக்கி (Kaki) என்றதோர் சாயம் உண்டுபண்ணுகிறார்
கள். நமக்கு அன்னியதேசங்களிலிருந்து கிடைக்கும் காக்கி
(Kaki Drill) டிரில்லினுடைய சாயமும் இச்சவுக்குப்பட்டைச்சா
யமே என்று கூறப்படுகிறது. இத்தகைய சாயம் வாய்ந்த சவுக்
குப்பட்டையின் மகிமையும் கொஞ்சகாலமாக நம்தேசத்தில் பர
வாது குறைவடைந்துவருகின்றது. நிற்க, சவுக்குமரத்தின்
செத்தை இன்னும் ஓர் அரிய விஷயத்திற்கு உபயோகப்படுகின்
றது. இச்சவுக்குச்செத்தையை களர் நிலத்தில் இரண்டடி
யுயரம் பரப்பி அடிக்கடி தண்ணீரை பாய்ச்சிவந்தால் களர்நில

முழுவதும் மாரி பயிரிடுவதற்கு உபயோகப்படுவதாகின்றது. இத்தகையமரங்கள் அநேகமாய் தஞ்சாவூர், கடலூர், செங்கற்பட்டு மதருஸ் முதலிய ஜில்லாக்களில் மிகுதியும் பயிரிடப்படுகின்றன. கோயமுத்தூர், சேலம் ஜில்லாக்களில் இம்மரத்தின் பெயரே இன்னதென அநேகருக்கு தெரியாதென்றே கூறலாம். ஆனால் இந்த ஜில்லாக்களிலுள்ள விவசாயிகள் மணற்பாங்கான இடங்களில் பயிர செய்யுமாறு முயற்சியெடுப்பார்களென்று நம்புகிறோம். இப்பயிரிடுவதற்கு வேண்டிய நாற்று முதலிய கிடைக்குமிடைத்தையும் மற்றும் வேண்டிய ஆதாரங்களையும் "திருவள்ளுவர்" பத்திராதிபருக்கு எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

போர்க் கருவிகள்.

சென்ற பங்குனி மாதத்திய 'செந்தமிழ்' பத்திரிகையில் ஸ்ரீமான் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதியிருப்பதாவது :—

பூர்வகாலத்தில் வைசியர்கள் தங்கள் தனதானியாதிகளைப் பிறர் வந்து கொள்ளையிட்டுச் செல்வதைக் கண்டு வீரரைக் காவலராகுமாறு வேண்டினர். அவர்கள் காவற் றொழிலை மேற்கொண்டு க்ஷத்திரியரென்னும் வகுப்பினராயினர். அவர் தங்காவலில் உலகவொழுக்க வழக்கங்களைத் தழுவி நன்னெறியிற் காத்தற்பாலராயினமையின் அவருக்கு முறைகளை வகுக்குங் கட்டுப்பாட்டினையுடைய அறிவினுடைய அந்தணர் இன்றியமையாதவராயினர். ஆதலின் அந்தணர் தலைமையும் அரசர் அடுத்த படியும் வணிகர் அவருக்குப் பின்னிலையு முடையராயினர் அரசர் தங்காவலுக்கு இன்றியமையாதபோர்க்கருவிகளையும் அவற்றைப் பிரயோகிக்கும் முறைகளையுந் தேருவாராயினர். தேர்ந்து தம்மைப் பகைவர் வந்து எளிதிலேதாக்காவகை மலையரண் காட்டரண் நீரரண் மதிலரண் என நால்வகையரண்களையும் அமைத்துக்கொள்வாராயினர்.

தண்டைகாலத்துப் போர்க்கருவிகள், வில், அம்பு, வாள், சூலம். வேல், சக்கரம், பரசு, கதை, வச்சிரம், எழு, ஈட்டி, விட்டேறு, பிலி, தண்டு தோமரம், கவண் முதலியன- இவையெல்

லாம் அஸ்திரம், சஸ்திரம் என்னும் இருவகையிலடங்கும்: அஸ்திரம் கை விடுபடை, சஸ்திரம் கைவிடாப்படை, அம்பும் வில்லுமே ஆதியில் ஐரோப்பியருக்கும் யுத்தாயுதமாம். தூரத்தேயுள்ள பட்சி மிருகாதிகளைக் கொல்வதற்காகச் சூழ்ச்சிசெய்யப்பட்ட ஆயுதம் அம்பும் வில்லுமாம்.

வில்லானது பாணத்தைத் தூரத்தேயுள்ள இலக்கிற்பாய்ந்துருவுமாறு தூரப்பது, பாணத்திற்கு வேகத்தைக்கொடுப்பது வில்லே வில்லு எத்துணைவிசையுடையதோ அத்துணைத் தூரத்துக்குப் பாணஞ் செல்லும், இக்காலத்தில் துப்பாக்கிகள் பீரங்கிகள் "கிறப்ஷாப்பெனல், ஹவிட்சர், என்பவன் வாதியபெயர் கொண்டன போலப் பண்டைக்காலத்திலும் விற்களுக்குக் கோதண்டம், காண்டீவம் எனப்பெயரிடப்பட்டன அக்காலத்து விற்களுள் உலோகங்களாற் செய்யப்படுவனவே சிறந்தன. வில் வித்தையில் வல்ல புருஷோத்தமன் ஒருவனேலே கையாடப்பட்ட வில்லுச்சாமானியர் பல்லாயிரவர் தூக்குதற்கரியதாயிற் றென்பது ராமாயணம். இக்காலத்தில் நெடுந்தாரைப் பீரங்கிகள் முப்பது நாற்பது குதிரைகளாலும் இருநூறு மூன்நூறு காலாட்களாலும் இழுத்துக் கொண்டுபோய் நாட்டப்படுகின்றன என்பது இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தசரித்திரங் கண்டவர் யாவருமறிவர்.

அது நிற்க வில்லினது வலிமையினும் மிக்க வலியினையுடைய கருவியொன்று காண்டல் வேண்டுமென ஐரோப்பியர் ஆககாக்கு முயன்றனர் முயன்றபோது துப்பாக்கி புலப்பட்டது. அம்புக்குப் பிரதியாக குண்டு புலப்பட்டது துப்பாக்கி வலியும் போதாதெனக் கண்டு பீரங்கி சூழ்ச்சி செய்யப்பட்டது. அதுவும் வலி போதாதெனக் கண்டு அதிலும் ஆயிரம் மடங்கு வலியுடைய பீரங்கிகளைக் காலந்தோறும் சூழ்ச்சி பண்ணி இயற்றி வருகின்றார்கள் குண்டுக்குப் பிரதியாகவும் மிக்க வலிமையுடைய பெருந்தாக்கு வெடிக்குண்டுகளும், முசலக் குண்டுகளும், நச்சுப் புகைக்குண்டுகளும் நிர்மூலக் குண்டுகளும் சூழ்ச்சி செய்யப்பட்டன.

ராமாயண பாரதகாலங்களிலே வழங்கப்பட்ட அஸ்திரங்கள் தற்காலத்துக் குண்டுகளிலும் சிறந்தனவாகத் தோன்றுகின்றன. நச்சுப் புகைக்குண்டுகளிலும், மோகனாஸ்தி

ரம் அற்புதமுடையது. வருணாஸ்திரம் அக்கினியஸ்திரங்களுங் கேட்கப்படுகின்றன. ஸ்ரீராமபிரான் அக்கினியஸ்திரத்தைக் கொண்டு கடலைவற்றடித்து இலங்கையிற் படையேற்ற முயன்றனர். ஆர்ச்சுனன் பெருங்காண்டாவனத்தை அக்கினியஸ்திரத்தாலழித்தான். இன்றைக்குச் சிலகாலத்துக்கு முன் ஜர்மனி தேசத்தார் ஆகாயத்திற் கடல் தாண்டிச்சென்று ஆங்கில நாட்டிற் குண்டு பொழிந்தாகள் என்று சொன்னால் சொன்னவன் பித்தனென்றிகழ்ந்து தள்ளப்படுவான். இப்போது ஜெர்மனி தேசத்தார் மாத்திரமன்று ஆங்கிலேயர், பிரான்சியர், ருஷியர் ஜப்பானியர் முதலானவர்களும் ஆகாயரதத்தை உபயோகித்து வருகிறார்கள்.

இப்போது ஐரோப்பிய தேசத்தில் நடக்கும் மகாயுத்தத்தில் ஆயிரக்கணக்கான ஆகாயரதங்கள் யுத்தஞ் செய்கின்றனவென்பதை யாரறியாதார். புராணங்களில் கூறப்பட்ட ஆகாயரதங்கள் மிக்க திட்பநுட்பங்கள் அமைந்தனவாகத் தோன்றுகின்றன. இராவணன் ஆகாயரதத்தில் இமயத்தின்மீதுஞ் சென்றான். அவனுடைய ரதம் கடல்மேலுஞ் செல்லும், நிலத்தின்மேலுஞ் செல்லும், மலைமேலும் செல்லும், நினைத்தவிடமெங்கும் இறங்கும். பழைய சித்திரங்களை நோக்கினால் ஆகாயவிமானம் செயற்கைச் சிறகுகளை யுடையதேயாம் அவற்றை யியக்கவும் நிறுத்தவும் தக்க கருவிக ளிருந்தனவாகத் தோன்றுகின்றன. தற்காலத்துச் செப்பளின்களும் சிறகுடையனவே. ஐரோப்பியருக்கு ஆகாயரதக்கருத்தை யுண்டாக்கிவிட்ட நூல்கள் எங்கள் புராணேதிகாசங்களே யாம்,

புராணேதிகாசங்களிலே மலைகளை ஊடறுத்துத் தகர்த்த படைக்கலங்களும் கூறப்பட்டுள்ளன. இந்நாளில் மலைகளைத் தகர்த்துத் தூளாக்கும் பீரங்கிகளில்லையாயினும் கோட்டைகளைத் தகர்த்துவிடக்கூடிய வலிய பீரங்கிகள் உண்டென்பது நாமூர்க்கோட்டை ஆண்டுவெர்ப்கோட்டைகள் பட்ட பாட்டால் அறியலாம்.

இந்நாள்காறும் ஐரோப்பிய மக்களால் அமைக்கப்படாத அற்புதக் கருவிகள் நம் முன்னோர்களால் அமைத்துப் பிரயோகிக்கப் பட்டனவாகப் புராணேதி[illegible]சங்கள் கூறுகின்றன. மதில்களின்மீது யந்திரங்கள் உருக்கிய உலோகநீரைவீசிப் பகைவரை

யோட்டும் சில பொறிகள் கவணெறிந்து அதி தூரத்திலேவரும் பகைவரையோட்டும் சில குரக்குப் பொறிகள் மதில் மேலேறும் பகைவரைக்கடித்தும் குத்தியும் எற்றியும் வீசும். சில மதிலேறும் பகைவரைக் கழுத்திற் சுருக்கிட்டிழுக்கும் சில கவைக்கோலாற் குத்தி அகழியில் ஆழ்த்தும்.

இன்னும் சதக்கினி, தள்ளிவெட்டி, களிற்றுப் பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப் பொறி, புலிப்பொறி, சகடப்பொறி, தகர்ப்பொறி, அரிநூற்பொறி எனப்பொறிகள் மதிலினிடத்து அமைக்கப்பட்டிருந்தன வாகவும் விளங்குகின்றன. சதக்கினி என்பது நூற்றுவரைக் கொல்லி. இஃதிரும்பினாற் செய்து கண்டோர் மயங்கித்தழுவுமாறு வர்ணமிட்டழகுறவமைத்து மதிற்புறத்தே நிறுத்துபாவையாம். தன்னைத்தழுவுவாரை ஒருவரொருவராக வளைத்து நூற்றுவரானவுடன் நெரித்துக்கொல்லும் வன்மையுடையது என்பவர், இவ்வாறே மற்றவைகளும் ஒவ்வோராற்றலுடைய மாயப்பொறிகளாம்.

ஜெர்மன் தேசத்திய திக்கற்ற குழந்தைகள்.

‘‘லோகல் ஆன்சிகர்’ என்ற ஜெர்மன் தினப்பதிப்புப் பத்திரிகை சென்ற ஆகஸ்டு-மீ 5-தேதியன்று பின்வருமாறு எழுதுகிறது:—

ஜெர்மனி தேசத்து பிரதானநகரமாகிய பெர்லின் என்ற ஊரில் ஏற்பட்டுள்ள அநாத ஆசிரமத்தில் மட்டும் பதினாயிரம் திக்கற்ற குழந்தைகள் போஷிக்கப்படுகிறார்கள். இதில் யுத்தத்தில் இறந்துபோன போர்வீரர்களின் (ஸோல்ஜர்) குழந்தைகள் தான் அதிகமாயிருக்கிறார்கள். குழந்தைகளில்லாத பெற்றோர்கள் அக்குழந்தைகளை சுவீகாரம் எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய வசதிகளை நிர்வாக அதிகாரிகள் செய்துகொடுக்கிறார்கள். குழந்தைகளை மேற்பார்வையிடும் ஒரு தாதி பின்வருமாறு சொல்லுகிறாள். ‘‘நாங்கள் சுவீகாரம் கொடுத்த பிள்ளைகள் ஒன்றாவது திருப்பியனுப்பப்படவில்லை. ஆனால் பொது ஜனங்கள் சுவீகாரம்

எடுத்துக்கொள்வதற்காக் குழந்தைகளைப் பொறுக்குவதில் தான் மிகுந்த தொந்திரவு ஏற்படுகிறது. புருடன் நீலநிறமான கண்களையும் பெருத்த தலையையும் உயரமாயுமுள்ள குழந்தையை விரும்புகிறான். அவனது மனைவி சுருட்டை மயிரையும் தடித்த திரேகத்தையுமுடைய குழந்தையை விரும்புகிறாள். அநேக தம்பதிகள் ஷாப்புக்கடைகளில் உடைகளை (Dress) ப்பொறுக்குவதுபோல் குழந்தைகளைத் தேர்கிறார்கள். அவர்கள் ஒன்றின் பின் ஒன்றாய் பல குழந்தைகளையும் பார்ப்பதனால் முடிவில் ஒரு குழந்தையின் பேரிலும் பிரியம் உண்டாவதில்லை. ஒரு குழந்தை மந்தமாயிருக்கிறதென்றும், இன்னொன்று பெருத்த குரலையுடையதாயிருக்கிறதென்றும், மற்றது தடித்த திரேகமுள்ளதாயிருக்கிறதென்றும், பின்னொன்று மெலிந்த சரீரத்தையுடையதாயிருக்கிறதென்றும், இன்னும் பலவிதமான காரணங்களைச் சொல்லிவிட்டுப் பேசாமலே போய்விடுகிறார்கள். சென்ற வாரத்தில் இந்த ஆபீசுக்கு வந்து பரிசோதித்த 1176 தம்பதிகளில் 23 பெயர்களே குழந்தைகளை சுவீகாரம் செய்து கொண்டனர். சில தம்பதிகள் 5, 6 குழந்தைகளைப்பொறுக்கி எடுத்து அவற்றில் ஒன்றை (லாட்டரி) குலுக்குச்சீட்டுமூலியமாய்த் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

தாதாபாய் நௌரோஜி

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

உலகத்திலே விருத்தியடையும் ஜாதியார்களுக்கும் விருத்தியாகாத ஜாதியார்களுக்கும் பல விஷயங்களிற் பெருத்த வித்தியாசமுண்டு. விருத்தியாகும் ஜாதியார் தங்களுடைய க்ஷேமத்தைப் பெருக்கக்கூடிய சகல வழிகளையும் கையாளுவார்கள். தேசாபிமானம் நிறைந்தவர்களாய், ஒற்றுமை யென்னுங் குணம் தங்களுக்கோர் வலிய அரணாகப் பொருந்தியவர்களாய், ஊக்கம் உற்சாகம் விடாமுயற்சி முதலிய நற்குணங்கள் செறிந்தவர்களாயிருப்பார்கள். தங்கள் தங்கள் நாட்டின் செல்வத்தையும், செல்வாக்கையும், கீர்த்

தியையும் பெருகச்செய்வதில் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். இடையில் தோன்றும் இடையூறுகளை வென்று மேன்மையடையக் கூடிய மார்க்கங்களைத் தேடுவார்கள். திருஷ்டாந்தமாக, உலகத்திலுள்ள பெரிய தேசங்களை யெல்லாமெடுத்துச் சீர்தூக்கிப் பார்த்தால் இந்த உண்மை தெற்றென விளங்கும். இங்கிலாண்டு தேசமானது இப்பொழுது மிகவும் செல்வாக்குடையதாயிருக்கிறது. இஃதேனித்தகைய உன்னத நிலைமையை யடைந்திருக்கின்றதென்பதை, இந்தியர்கள் ஆராய்ந்தறியவேண்டும். அப்படியாராயப்புகுந்தால், வெளிப்படையாகச் சிலகாரணங்களேனும் யாவருக்கும் தோன்றலாகும். பிரிட்டிஷ் ஜாதியார் தொகையில் குறைந்தவர்களே யென்றாலும், அவர்களுடைய அதிகாரமானது உலகமெங்கும் பரவியிருக்கிறது. பிரிட்டிஷார் ஓயாத முயற்சியுடையவர்கள். மிகுதியான ஒற்றுமையும் தேசாபிமானமும் படைத்தவர்கள். தங்கள் நாட்டுக்குத் தீமை வருமெனத் தெரிந்தால் தங்கள் ராஜாங்கத்தின் பெருமையினையும், கீர்த்தியினையுமே பொது நோக்கமாகக் கருதித் தங்களுக்கு இயற்கையாத் தோன்றியிருக்கும் அபிப்பிராயபேதங்களை யெல்லாம் அறவே மறந்து ஒற்றுமைக்குணமும், ஒருமைப்பட்ட மனமும்பாராட்டும் உத்தமத் தன்மை வாய்ந்தவர்கள் இந்தியர்களாகிய நாம் இவர்களுடைய குணங்களில் சிலவற்றையேனும் பின் பற்றுவது பொருத்தமுடையதாகும், நம் நாட்டுக்காக அல்லும் பகலுமாக அனவரதமும் பாடுபடும் பெரியோர்களைப் போற்றும் குணங்கூட நம்மிடத்தில் லையே! என்னபரிதாபம்! கனம் தாதாபாய் நௌரோஜி இந்தியாவுக்காக மிகவும் பாடுபடுகின்றவர். அவருடைய 92வது ஆண்டு நிறைவுக்கொண்டாட்டம் சென்ற செப்டம்பர்-மீ 4தேதி நம் தேசத்தில் பலபாகங்களிலும் கொண்டாடப்பட்டதால் அவரைப் பற்றி நமது நேயர்கள் தெரிந்து கொள்ளுமாறு சுருக்கமாகச் சில விஷயங்கள் இங்கு எழுதுவது பொருத்தமாகும்.

இந்தியர்களுக்கெல்லாம் தலைவரெனக் கருதப்படுபவரும், இந்தியர்களுக்கெல்லாம் தேசாபிமானத்தை யூட்டுவதற்கென்றே தோன்றியவரும், நம் நாட்டாரேயேயன்றிப் பிறநாட்டாராலும் மதிக்கப்படுபவருமாகிய கனம் தாதாபாய் நௌரோஜி யென்பவர் குஜராத்தியிலே, நவ்ஸரி என்ற கிராமத்திலே 1825-வரு செப்டம்பர்-மீ 4-உ ஜனனமானார். இவரது இளமைப் பிராயத்தே தந்தையார் மரிக்க. இவரது தாயார் இவரைப் பலவிதத்திலும் தேற்றுவாராகி இனிய புதல்வருக்கு உலகஞானம் யாவும் ஒரும்

கேயமையச்செய்தனர். கற்றோரே கண்ணுடையாரெனும் பெரும்
நீதியை யுன்னி இவரது தாயார் இவருக்குக் கல்விப்பயிற்சி செய்
வித்தனர். ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்
றோனெனக் கேட்ட தாயன்றோ சிறப்புடையள்? இவ்வருங்குணங்
களெல்லாம் இவ்வம்மையிடத்துப் பொருந்தியிருந்தனவென்பது
கனம் தாதாபாய் நௌரோஜியினது அருமையான குணங்களா
லேயே நன்கு விளங்கும். கல்விப்பயிற்சி செய்வித்ததோடமை
யாது இவருக்குச்சன்மார்க்கமும் போதித்து, இவரைச்சதாகாலமும்
நல்வழிப்படுத்திப் புதல்வரைக் கண்ணிமை கண்ணைக்காக்குமாறு
போற்றி வந்தனர். ‘தாயைப்போலபிள்ளை’ யென்பதுண்மையாயின்
கனம் தாதாபாய் அவர்களின் தாயார் எவ்வளவு பெருமை வாய்ந்
திருந்தார்களோ என்பது நம்மால் அளவிடும் தரத்தன்று. “என்
னுடைய தாயார் கல்வியறிவில்லாதிருந்த போதிலும், என்னிடத்
தில் பேரன்பு வகித்திருந்தபோதிலும், மிகுந்த ஞானமுடைய அவள்
என்னைத் தீநெறி புகாவண்ணம் பாது காத்து வந்தாள்” என
கனம் தாதாபாயே கூறியிருக்கிறார் “நான் சிறுகுழந்தையாயிருக்கும்
போதே தான் வைதவ்யமடைந்தும், என்னையே தன்னுடைய ஆஸ்
தியெல்லாமெனக் கருதிக் காத்தனள். நான் பெண்கல்வி விஷய
மாகவும், மற்றும் பல ஆசாரச் சீர்திருத்தங்கள் விஷயமாகவும்
செய்த வேலைகளுக்கெல்லாம் எனக்குற்றதுணையாயிருந்தாள்
என்னை இவ்வளவு ஸ்திதிக்குக் கொண்டு வந்தவள் என் தாயே”
எனவும் இவர் கூறியிருக்கிறார்.

சுதேச பாஷைப்பாடசாலையிலும், ஆங்கிலேயப் பாடசாலையி
லும் படித்து தேர்ச்சியான பின்னர் கனம் தாதாபாய் எல்பின்ஸ்
டன் கலாசாலையில் போய் சேர்ந்து அங்கு முதல் மாணவராகப்
பிரகாசித்தனர். கலாசாலையில் படித்து வரும்போது இவருடைய
புத்திக்கூர்மையைப்பார்த்து எல்லோரும் வியந்தனர். இவர் தம்மு
டைய கலாசாலைப் படிப்பை முடித்தவுடன், அப்போது பம்பாய்
ஹைகோர்ட்டில் சீப் ஜட்ஜாயிருந்த ஸர். எர்ஸ்கைன்பெர்ரி தம்
முடைய சொந்தசெலவில் இவரை லண்டனுக் கனுப்பிப் பாரிஸ்டர்
பரீட்சைக்குப் படிக்கச் செய்வதாய்த் தெரிவித்தார். மிஸ்டர்
தாதாபாய்க்கு இங்கிலண்டு செல்லப் பிரியமே யென்றாலும்,
இவரெங்கே கிருஸ்தவராய் விடுவாரோ என்று பயந்து இவரு
டைய குடும்பத்தார்கள் இவரை தடைசெய்து விட்டார்கள். இவ
ருக்கு இந்தச்சமயத்தில் கவர்ன்மெண்டு உத்தியோகமும் கிடைக்
கக்கூடியதாயிருந்தது ஆனால் நாமெல்லாஞ் செய்த புண்ணியப்

199042

பேற்றால் இவர் தமக்கு வலியவே கிடைத்த கவர்ன்மெண்ட் உத்தியோகத்தை யங்கீகரிக்கவில்லை.

சென்ற 1854-ஆம் எல்பின்ஸ்டன் கலாசாலையிலேயே இவருக்குக் கணித சாஸ்திர உபாத்தியாயர் வேலை கொடுக்கப்பட்டது. இப்பேர்ப்பட்ட வேலை முதல் முதல் இந்தியராகிய இவருக்கே கொடுக்கப்பட்டமையால் இதனை நாம் ஒரு பெரிய கௌரவமாகக் கருதவேண்டும்! இப்பாடசாலையிலுபாத்தியாயராக இவர் சிலகாலம் வேலை செய்து ராஸ்ட்காப்டர் என்ற குஜராத்தி பத்திரிகையை ஆரம்பித்து அதனை நடத்தினர். பின்னர் லண்டனில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட காமா கம்பெனியிலொருவராக இவர் சென்ற 1855-ஆம் இங்கிலாண்டுக்குச் சென்றார். இங்கிலாண்டில் இவர் தம்முடைய வியாபார விஷயமாக உழைத்ததோடு நில்லாமல் ஆங்கிலேயருக்கு இந்தியாவைப்பற்றிய விஷயங்களையும் அடிக்கடி போதித்து வந்தார் லண்டனில் இவர் "இந்தியன் ஸொஸைடி" என்ற சங்கமொன்றை ஸ்தாபித்தனர்; இப்போது இச்சங்கம் "ஈஸ்ட் இந்தியா அஸ்ஸோஸியேஷன்" என்றழைக்கப்படுகிறது. இச்சங்கத்தின் மூலமாய் இவர் நம்மவர்களுக்காக மிகவும் பாடுபட்டார், இவருடைய கியாதியானது இந்தியா முழுவதும் பரவிற்று. ஆகையினாலே இவர் சென்ற 1869-ஆம் இந்தியாவுக் த் திரும்பிய போது பம்பாயிலுள்ள ஜனங்கள் ஒரு பெரிய பொதுக்கூட்டங் கூடி இவரை வாழ்த்தித் துதித்துப் புகழ்ந்து பரிசளித்தார்கள் அதே வருஷம் இவர் பழையபடியும் இங்கிலாண்டுக்குச் சென்று சென்ற 1871-72-வரு வருஷத்தில் இந்திய விஷயங்களைப்பற்றி விசாரிக்கும்படியாக நியமிக்கப்பட்ட பார்லிமெண்டரி கமிட்டி அல்லது பாஸெட் கமிட்டியின் முன்னர் சாட்சியம் கொடுத்தார். பிற்பாடு இவர் இந்தியாவுக்குத் திரும்பியதும் பரோடா தேசத்து முதன் மந்திரியாகச் சிறிதுகாலம் வேலை பார்த்தார்.

இந்தியாவின் தரித்திர நிலைமையைப்பற்றி இவருக்கும் இந்தியா செகர்டேரிக்கும் பலமான கடிதப்போக்கு வரத்துகள் நடந்தன பெரிய தேசாபிமானியாகிய கனம் தாதாபாய் நௌரோஜி தம் நாட்டின் தரித்திர ஸ்திதியையுணர்ந்து சென்ற 1880-ஆம் முதல் 1883-ஆம் வரையில் இந்தியா செகர்டேரிக்குக் கடிதங்களெழுதி மிகவும் கஷ்டப்பட்டுழைத்தார். இப்பெரியவர் இந்தியாவுக்குச் செய்திருக்கும் வேலைகளையெல்லாம்

அளவிட்டுக் கூறுவது எம்மால் முடியாது. ஆகையினாலே சுருக்கமாகச் சில விஷயங்களைக் குறிப்பிடுகிறோம். காங்கிரெஸ் மகா சபையை உற்பத்தி செய்தவர்களிவரொருவர். 1886-ஆம் கூடிய காங்கிரெஸ் சபையிலும்,, 1893-ஆம் கூடிய காங்கிரெஸ் சபையிலும், 1906-ஆம் கூடிய காங்கிரெஸ் மகாசபையிலுமிவர் அக்கிராஸனம் வகித்தார். சென்ற 1892-ஆம் இவர் பார்லிமெண்டு மெம்பராகி சிவில் பரீக்ஷைகள் இந்தியாவிலும் இங்கிலாண்டிலும் நடத்தப்படவேண்டுமென்ற தீர்மானத்தைப் பார்லிமெண்ட் மகாசபையில் நிறைவேற்றினர். சென்ற 1895-ஆம் ராயல் கமிஷன் நியமிக்கப்பட்டபோது ஸர் வில்லியம் வெட்டர் பர்னும் காலஞ்சென்ற ஸ்ரீமான் கெயினும் கனம் தாதாபாயும் மெம்பர்களாகவிருந்து அபரிமிதமான வேலை செய்தார்கள். தற்சமயம் இவரது விருத்தாப்பியமானது யாதொரு வேலையும் செய்யவொட்டாமல் தடுத்தபோதிலும், தம்முடைய இருப்பிடத்திலிருந்துகொண்டு தேசத்திற்காக உழைக்கும் உத்தமர்களுக்கு உற்சாகத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கிறார்.

திற்கசக்கிரவர்த்தியவர்கள் இந்தியாவிற்கு விஜயஞ்செய்தபொழுது தாதாபாய் அவருக்குநல்வரவு கூறியனுப்பிய தந்திசமாச்சாரத்திற்கு, ராஜசக்கிரவர்த்தியவர்களே நேராக பதில் தந்தி கொடுக்கப்பெற்ற பாக்கியத்தையும் அடைந்தார். (ராஜ சக்கிரவர்த்தி தாமாக நேரில் தம்மைப்போன்ற ராஜாக்களுக்கல்லாமல் பிறருக்கு பதிலளிக்கமாட்டார். தமது அந்தரங்க காரியதரிசி (Private Secretary.) மூலியமாய்த் தான் பதில் அனுப்புவது வழக்கம்.) நமது இந்தியா தேசத்து ராஜப்பிரதிநிதியாக இருந்த லார்டு ஹார்டிஞ்சு பிரபு சென்ற வருடத்தில் இவரது இருப்பிடமாகிய வர்சோவுக்கு வலியவந்து சம்பாஷித்தார். இத்தகைய கீர்த்தி பெற்ற கனம் தாதாபாய் நௌரோஜியை நான் என்னென்று தான் புகழ்வேன். பரிசுத்தமான நடத்தையும், மிகுந்த தேசாபிமானமுமுடையவர். இவரைப்போல் தங்கத்தால் சிலையடித்து வைத்து நாமெல்லோரும் பூஜித்து வந்தாலும் தகும். இவர் சிரஞ்சீவியாய் வாழ்ந்து இவரது உழைப்பின் பலனாக இந்தியாவிற்கு ஏற்படப் போகும் பெருமையைக் கண்கூடாகக் கண்டு களிக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக. சுபம்.

வர்த்தமானக் குறிப்புகள்.

கோயமுத்தூர் காலேஜ் பிரின்சிபால்:—இக்கலாசாலை ஆரம்பித்த காலமுதல் ஐரோப்பியரே பிரின்சிபாலா யிருக்கவேண்டுமென்று ஒரு விதியிருந்து வந்தது. சில நாட்களுக்குமுன் இவ்விதியை மாற்றினதின் பலனாக ஸ்ரீமாந் கே. என். வைத்தியநாத ஐயர் எம். ஏ. எல். டி. காயமான பிரின்சிபாலாக நியமிக்கப்பட்டார். நீண்ட காலமாக எதிர்பார்த்த பலருக்கும் இது மிக்க சந்தோஷத்தை விளைவித்தது. ஸ்ரீமான் ஐயருக்கு இந்த ஸ்தானம் காயமாகக் கிடைத்தது பற்றி மாணவர்கள் அவருக்கு ஒரு சிறு விருந்து நடத்தினார்கள். ஸ்ரீமான் ஐயர் தமக்குச் செய்த விருந்தை ஒப்புக்கொள்ளும்போது இன்றைய விருந்து சாதாரணமான தென்றும் பிரதி தினமும் மாணவர்களுக்கும் தமக்கும் உள்ள சம்பந்தமே பெரிய விருந்தென்றும், தாம் புஸ்தகக் கல்வியை மட்டும் மாணவர்களுக்குக் கற்பியாமல், அவர்களைத் தங்களது தேசத்திற்கு ஊழியக்காரர்களாகச் செய்வதே தமது முக்கிய கடைமையும் நோக்கமும் என்று சொன்னார். பலர் அவரது தேச ஊழியத்தைப்பற்றி பேசிய பின் சபை கலைந்தது. நாம் பார்த்த மட்டில் மாணவர்களிடம் உண்மையான அன்பைக்கொண்டுள்ளவர்களில் இவரை முதன்மையாகச் சொல்லலாம்.

கவர்னரின் வருகை:—அக்டோபர் மாதக் கடைசியில் கவர்னர் கோயமுத்தூரிலுள்ள விவசாய கலாசாலையைப் பார்வையிடுவாரென்றும், ஆனைமலைப் பிரதேசத்திற்கு வேட்டையாடச் செல்லுவாரென்றும்- காங்கேயம் மாடுகள் வளர்ப்பதில் கியாதி பெற்ற பழையகோட்டை ராய்பகதூர் சர்க்கரை மன்றாடியாரது ஊருக்குச் செல்வாரென்றும் தெரியவருகிறது.

கோவைத் தமிழ்ச் சங்கம்:—இச்சங்கத்தின் ஆதரவின் கீழ் கலாசாலை மாணவர்களின் பாட புத்தகங்களில் கடுமையான சில பாகங்களைப்பற்றிய பிரசங்கங்கள் சில பண்டிதர்களால் செய்யப்பட்டு வருவதானது நல்ல பலனைக்கொடுக்குமென்று நம்புகிறோம். ஆனால் வாதப் பிரதிவாதத்திற்கு இடங்கொடாமலிருப்பது நலம்

பள்ளபாளையம் மாணவர் தமிழ்ச்சங்கம் :—இச்சங்கத்தின் ஆதரவில் பிரதி வாரம் ஞாயிற்றுக்கிழமை தோறும் அறிவை விருத்தி செய்யக்கூடிய பிரசங்கங்கள் நடைபெற்று வருவது சிலாகிக்கக் கூடியதேயாகும்.

காமாட்சி விலாச வாசகசாலை :—இச்சங்கத்தில் சென்ற மாதக் கடைசியில் புத்தகசாலையொன்று புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. "கொன்றைவேந்தன் என்ற நீதிநூலிலுள்ள சூத்திரங்களை வரன் முறையாகப் பிரதிவாரந்தோறும் பிரசங்கிப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டு சென்ற-மீ 30-உ "திருவள்ளுவர்" பத்திராதிபர் கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீமான் சி. பி. வேங்கடட்டராமன் செட்டியாரால் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற சூத்திரத்தைப்பற்றி இனிமையாக பிரசங்கிக்கப்பட்டது. இச்சங்கத்தை ஸ்தாபித்து அதன் முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் ஸ்ரீமான் பழனிசாமி செட்டியார், வெ. ப. வேங்கடட்டராமன் செட்டியார், முதலியவர்களின் பொது நல ஊக்கம் பாராட்டத்தக்கதேயாகும்.

சன்மார்க்க சங்கம் :— சுண்டக்கோயமுத்தூர் (சுண்டக்காமுத்தூர்) பிரபல மிராசுதாரராகிய ஸ்ரீமான் கே. பி. பழனிசாமிசெட்டியார் குனியமுத்தூர்ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளை முதலிய சில கனவான்களின் நன் முயற்சியால் ஷை யூரில் சன்மார்க்க சங்கம் யொன்று ஸ்தாபிக்கப்பட்டு பிரதி திங்கட்கிழமையும் அறிவை விருத்தி செய்யக்கூடிய பல உபன்யாசங்கள் தக்கோர்களால் செய்யப்பட்டு வருகின்றது.

அன்னதானம் :—சுண்டக்கோயமுத்தூர் ஸ்ரீமான் கே. பி. பழனிசாமி செட்டியாரவர்கள் தமக்கு ஆண் குழந்தை பிறந்ததின் நிமித்தம் அக்டோபர்-மீ 2-உ பேரூரில் 500 பிராமணர்களுக்கும், ஆயிரக்கணக்கான மற்ற வகுப்பினருக்கும் திவ்யமான போஜனமளித்தார்.

நமது பத்திரிகை :—சென்ற மாதத்தில் பிரசுரிக்கவேண்டிய ஐந்தாவது பகுதியை இம்மாதத்தில் பிரசுரித்திருக்கிறோம். நயமான காகிதத்திலேயே அச்சிடுவதாய்த் தீர்மானித்திருந்தோம். ஆனால் தற்காலத்தில் நடந்துவரும் பயங்கரமான ஐரோப்பிய யுத்தத்தின் காரணமாக நயமான காகிதம் கிடைப்பது அருமையாக விருப்பதால் மட்டமான காகிதத்தில் அச்சிடும்படி நேர்ந்தது. அதற்காக நமது நண்பர்கள் மன்னிப்பார்களென்று நம்புகிறோம்.

CUOPPI

கல்வியறிவில்லாத ஸ்திரீயின் செய்கை.

ஒரு ஸ்திரீயினுடைய பிள்ளை கல்வியில் அதிக முயற்சியுள்ளவனாய்த் தர்ம பாடசாலைக்குப் போய்ப் படித்துக்கொண்டுவருவான். அவன் வீட்டிலும் பூகோளம், வானசாஸ்திரம் முதலிய புஸ்தகங்களை ஓயாமல் வாசித்துக்கொண்டிருப்பான். அவனைப்படிக்கவேண்டாமென்று கூலிவேலை செய்யும்படிக்கு அவனுடைய தாய் சொல்லியும் அவன் கேட்கவில்லை ஒரு நாள் அவன் வெளியேபோயிருந்த சமயத்தில் அந்தப்பரமசண்டாளி பிள்ளைமேலிருந்த கோபத்தைப் புஸ்தகங்களிடத்திற் காட்ட ஆரம்பித்தாள் அவள் பூமி சாஸ்திரத்தைக் கிழித்து பூமியின்மேல் எறிந்துவிட்டாள். வானசாஸ்திரத்தைக் கிழித்து வானத்தில் பறக்கும்படி எறிந்து விட்டாள். அக்கினி சாஸ்திரத்தைக் கிழித்து அக்கினியிற் போட்டுவிட்டாள். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் முதலிய விதிகளடங்கிய கணித சாஸ்திரத்தைக் கிழித்துத் துண்டுகளாக்கி அவைகளைக் கூட்டிப் பெருக்கிக் கழித்துக் குப்பைக்குக் கொடுத்துவிட்டாள். இலக்கணமென்கிற நல்லபெயரை வைத்துக்கொண்டு விவாதம், வேற்றுமை, விகற்பம், ஐயம், திரிபு, மயக்கம், வழு, அல்வழி, முதலிய அவசபகுணங்கள் அடங்கிய அந்த நூலைக்கிழித்து, ஒருமையைப்பன்மையாக்கி நெடிலைக் குறிலாக்கி, வல்லினத்தை மெல்லினமாக்கி, ஆண்பாலைப் பெண்பாலாக்கி, பெண்பாலையும் அலியாக்கி, விகாரப்படுத்தி, வேறுபடுத்தி அந்த நூலின் குணத்தை அதனிடத்திலேயே காட்டினாள். நியாய சாஸ்திரத்தைக் கிழித்து அநியாயஞ் செய்தாள்.

திருவள்ளுவர்:—இப்பெயர் பூண்டு நம் கோயம்புத்தூரிலிருந்தும் மாதாந்தப் பத்திரிகையாக நமது நண்பர் ஸ்ரீமாந் K. S. சுப்பிரமணியபிள்ளையவர்களால், பிரசரிக்கப்பெற்று வருகிறது இது நல்ல விஷயங்களையும், இனிய நடையையும் கொண்டுள்ளது சந்தாவும் சொற்பம், இதற்கு நன்கொடையாளர் ஆகவும், சந்தாதாரர் ஆகவும், சேர்ந்து இதனை யாதரிக்கத் தமிழகம் கடமைப்பட்டிருக்கிறது. இதனாசிரியர் நிரம்பிய பாஷாபிமானமும், தேசாபிமானமும் கொண்ட ஜனோபகாரி கோயம்புத்தூர் காலேஜில் தமிழ்ப்பண்டிதராயிருந்தவரும் (திரிசிரபுரம்) தியாகராய செட்டியாரவர்கள் மாணாக்கருமாகிய ஸ்ரீமான் சபாபதி பிள்ளையவர்களின் குமாரர் என்றால் இவரைப்பற்றி வேறு சொல்வானேன். ?

பேரூர் சைவப்பிரகாசம், ஆகஸ்டு 1916

199052

இனும்! இனும்!

அபூர்வமான மூலிகை.

சகல வியாதிகளையும் கண்டிக்ககூடிய மூலிகையொன்று தேடுதற்கரிய மகானால் நமக்கு அனுக்கிரகம் செய்யப்பட்டதை, லோகோபகார்த்தந்தின் பொருட்டு யாதொரு சிலவு இல்லாமல் ஏழைகளுக்கு இனுமாக அனுப்பப்படும். வேண்டியவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

எஸ். ஏ. கந்தசாமிபிள்ளை,
கண்டிராக்டர்,
மேட்டுப்பாளையம்,
கோயமுத்தூர் ஜில்லா

என். நாராயணசாமிபிள்ளை,
இரும்பு, வர்ணம், பூட்டு வியாபாரம்,
சப்ளையர் அண்டு கமிஷன் ஏஜண்டு
கோயமுத்தூர்.

விளம்பரம்.

போட்டோ படங்கள் எடுத்துக்கொடுப்பதுடன், பழைய படங்களை புதிதாகவும், பெரியதாகவும் செய்துகொடுக்கப்படும். என்லார்ச்மெண்டு சுத்தமானதாகவும் குறைந்த சார்ச்சுக்கும் செய்யப்படும்.

M. R. PILLAI,
Photographer and Optician,
Big Bazzar Street,
COIMBATORE.

[illegible] வ. உ. சிதம்பரம[illegible]ளையவர்க[illegible]ள.

மனம்போல வாழ்வு — இஃ[illegible] இம்மை மறுமை[illegible]ங்களை அடைதற்கூறிய நெறிகளைத் தெளிவாகக்கூறும் அரிய நூல். இது முற்றிலும் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு.

மெய்யறிவு:— அறமும் பொருளும் இன்பமும் வீடும் அவற்றைச் செய்[illegible]ம் வழிகளும் பல உபமானங்களோடு மிகச்சுருக்கமாகவும் கூறப்பட்டுள. இது நீதி நூல்களின் காரணமெனத்தக்கது.

அகமே [illegible]ம்:— இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அ[illegible]தற்[illegible] மார்க்[illegible]களை வரிசைப்படுத்தி இனிமையாகக் கூ[illegible] இதனை ஒவ்வொருவரும் கற்றல் இன்றியமையாதது.

வலிமைக்கு மார்க்கம்:— இதில் எளிய நிலைமையை எய்தியுள்ளோர் வலிய நிலைமையை எய்துதற்குரிய வழிகள் விரிவாகவும் தெளிவாகவும் யாவரும் கைக்கொள்ளத்தக்க விதத்தில் கூறப்பட்டுள்ளன. இது விரைவில் வெளிவரும்

ஒவ்வொன்றின் விலையும் அணா எட்டு. வேண்டுவோர் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்,
பிரம்பூர், சென்னை.

விளம்பரம்.

கனவான்களே !

இதனால் சகலமான கனதனவான்களுக்கு தெரிவிப்பதென்னவென்றால் இப்போது துப்பாக்கிகளுக்கு வேண்டிய தோட்டாக்கள் என்னிடத்தில் விற்பனைக்கு தயாராயிருக்கிறது ரிவால்வர் முதலானவைகளுக்கு வேண்டிய தோட்டாக்கள் தெரியப்படுத்தினால் வேண்டிய தினுசுகளை தருவித்து சப்ளை செய்யப்படும்.

அடியில்கண்ட தோட்டாக்கள் இப்போது
விற்பனைக்கு கிடைக்கும்.

12 போர் “கைனுக்கு” தோட்டாக்கள் நெ 1, 4, 6 & 8
புகையில்லாதது ம்

12 போர் “கைனுக்கு” தோட்டாக்கள் நெ S. S. G,
B. B, 4, 6 & 8 கருப்பு பவுடர்.

விலை சரசம்.

கனதனவான்கள் யாவரும் என்னிடத்தில் தேவையான சரக்குகள் வாங்குவீர்களென கோருகிறேன்.

கே. வி. செட்டியார்,
ஒயின் வியாபாரம்,
4/4 பெரியகடைவீதி, கோயமுத்தூர்.